முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சேலம்

முன்னிலை: திரு. இரா.வேலரஸ், B.Sc.,B.L., LL.M.,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி, சேலம்.
2025–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 04 ம் நாள் வியாழக்கிழமை

இடைநிலை மனு எண். 02/2021
in
அசல் வழக்கு எண். 127/2021

1. சியாமளா கௌரி
2. மைனர் திவ்யேஷ்
மைனரின் சார்பாக அடுத்த தோழி/ பாதுகாவலர் தாயார்
சியாமளா கௌரி ... மனுதாரர்கள்/ வாதிகள்

/எதிர்/

1. வெங்கடேஷ்
2. சார் பதிவாளர், ஓமலூர்
3. மாவட்ட ஆட்சியர், சேலம் .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

4. ராமசாமி .... எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர்

இம்மனு 05.11.2025 ம் தேதி என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.S.விஜயராகவன் அவர்கள் முன்னிலையாகியும், 1–ம் எதிர்மனுதாரர்/ 1–ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.செல்வகீதன் அவர்கள் முன்னிலையாகியும், 2 மற்றும் 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அழைத்தும் ஆஜரின்மையால் அவர்கள் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.அருள் விக்னேஷ் அவர்கள் முன்னிலையாகியும் இரு தரப்பு வாதுரைகளை கேட்டும், வழக்காவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்:–

## உத்தரவு

மனுதாரர்கள்/ வாதிகள் 4–ம் எதிர்மனுதாரர் /உத்தேச தரப்பினரை அசல் வழக்கில் 4–ம் பிரதிவாதியாக சேர்த்து உத்தரவிடக் கோரி உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151–இன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார்கள்.

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:27:31 +0530

2. <u>மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆணையுறுதி ஆவணத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகளின் சுருக்கம் பின்வருமாறு:–</u>

மனுதாரர்கள் அசல் வழக்கில் வாதிகள் ஆவார்கள். அசல் வழக்கானது வாதிகளால் பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் முதல் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் தாவா சொத்துக்களை எவ்வித வில்லங்கமும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் தாக்கல் செய்துள்ளார். 1–வது பிரதிவாதி கடந்த 20.04.2021 அன்று ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஒரு ராமசாமி என்பவருக்கு பெயரளவில் கிரையப்பத்திரம் ஏழுதி கொடுத்ததாக தெரிய வருகிறது. மேற்படி பெயரளவில் ஏற்படுத்தப்பட்ட கிரையப்பத்திரம் செல்லத்தக்க ஆவணமல்ல. மேற்படி 1–ம் எதிர்மனுதாரரின் செயலானது மனுதாரர்களை ஏமாற்றும் நோக்கில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேற்படி கிரையப்பத்திரத்தின் படி சொத்தை வாங்கிய 4ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர் தனது பெயரில் பட்டா பெற முயற்சித்து வருகிறார். இவ்வழக்கில் இறுதி முடிவு எட்டப்படுவதற்காக மேற்படி 4–ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர் இவ்வழக்கிற்கு அவசியமான தரப்பினர் ஆவார். எனவே அவரை இவ்வழக்கில் 4–ம் பிரதிவாதியாக சேர்க்க உத்தரவிடக்கோரி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>1–ம் எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையில் கூறப்பட்டுள்ள சங்கதிகளின் சுருக்கம் பின்வருமா:–</u>

மனு சட்டப்படியும் பொருண்மைகளின்படியும் நிலைநிற்கத்தக்கது அல்ல. இந்த எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதியால் ஒப்புக் கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். அசல்

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:27:39 +0530

வழக்கானது வாதிகளால் பாகப்பிரிவினை, நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி முதல் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதும், 1–வது பிரதிவாதி கடந்த 20.04.2021 அன்று ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஒரு ராமசாமி என்பவருக்கு பெயரளவில் கிரையப்பத்திரம் ஏழுதி கொடுத்ததாக தெரிய வருகிறது என்பதும், மேற்படி பெயரளவில் ஏற்படுத்தப்பட்ட கிரையப்பத்திரம் செல்லத்தக்க ஆவணமல்ல என்பதும், மேற்படி 1–ம் எதிர்மனுதாரரின் செயலானது மனுதாரர்களை ஏமாற்றும் நோக்கில் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதும், மேற்படி கிரையப்பத்திரத்தின் படி சொத்தை வாங்கிய 4ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர் தனது பெயரில் பட்டா பெற முயற்சிக்கும் சூழ்நிலையில் உள்ளார் என்பதும், எனவே மேற்படி 4–ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர் இவ்வழக்கிற்கு அவசியமான தரப்பினர் என்பதும் தவறான சங்கதிகள் ஆகும். மேற்படி ராமசாமிக்கு எழுதி கொடுத்த கிரையப்பத்திரமானது பெயரளவில் ஏற்படுத்தப்பட்ட கிரையப்பத்திரம் அல்ல. 1–ம் எதிர்மனுதாரர்/ 1–ம் பிரதிவாதி 4–ம் எதிர்மனுதாரரான உத்தேச தரப்பினருக்கு செல்லக்கூடிய மற்றும் உண்மையான கிரையப்பத்திரத்தைத்தான் எழுதி கொடுத்துள்ளார். ஏனெனில் 1–ம் பிரதிவாதி சுயமாக வாங்கிய சொத்துக்களில் மனுதாரர்கள் உரிமை கோர இயலாது. மேலும் மனுதாரர்கள் தங்கள் மனுவில் ஆரம்பத்திலிருந்தே முதல் மனுதாரரின் பாட்டனாரால் முதல் பிரதிவாதியின் பெயரில் அந்த சொத்துக்கள் வாங்கப்பட்டது என்று கூறுவது முற்றிலும் தவறானதாகும். 1–ம் பிரதிவாதி மட்டுமே அவரது சுய சம்பாத்தியத்தின் மூலம் தாவா சொத்துக்களை கிரையம் பெற்றார். மேலும் பினாமி பரிவர்த்தனைகள் (தடை) சட்டம் 1988 குறிப்பாக பிரிவு 3(2) அமலுக்கு வந்தது. துணைப்பிரிவு 1–ல் உள்ள எதுவும் எந்தவொரு நபரும் அவரது

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:27:59 +0530

மனைவி மற்றும் அவரது திருமணமாகாத மகள் பெயரில் சொத்து வாங்குவதற்கு பொருந்தாது என்றும், மேலும் அந்த சொத்து மனைவி அல்லது திருமணமாகாத மகளின் நலனுக்காக வாங்கப்பட்டது என்று மாறாக நிரூபிக்கப்படாவிட்டால் அது அவ்வாறாக கருதப்படும் என்றும், ஆனால் இந்த வழக்கில் மனுதாரரால் கூறப்படும் கூற்றுக்கள் 1–ம் எதிர்மனுதாரரின் பாட்டனார் தனது குடும்பத்தின் நலனுக்காக 1–ம் எதிர்மனுதாரர் பெயரில் கிரையம் பெற்றார் என்ற வாதம் பினாமி பரிவர்த்தனையின் கீழ் மட்டுமே வருகிறது. மேலும் இது சட்டத்தால் ஏற்றுக்கொள்ள முடியாது. எனவே மனுதாரர்களால் தாக்கல் செய்துள்ள இம்மனு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. எனவே உத்தேச தரப்பினர் இவ்வழக்கிற்கு அவசியமற்ற தரப்பினர் ஆவார். எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. <u>4– ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பதிலுரையில் கூறப்பட்ட சங்கதிகளின் சுருக்கம் பின்வருமாறு</u>:–

மனு சட்டப்படியும் பொருண்மைகளின்படியும் நிலைநிற்கத்தக்கது அல்ல. இந்த எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினரால் ஒப்புக் கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். தாவா சொத்துக்களை 1–ம் எதிர்மனுதாரரின் பாட்டனார் முத்துகவுண்டர் 1–ம் எதிர்மனுதாரர் மற்றும் 1–ம் மனுதாரரின் நலனுக்காக வாங்கினார் என்பதை குறித்து அசல் வழக்கில் விளம்புகை பரிகாரம் கோராமல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இவ்வழக்கானது சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. மேலும் 1–வது பிரதிவாதி கடந்த 20.04.2021 அன்று ஓமலூர் சார்பதிவாளர் அலுவலகத்தில் ராமசாமிக்கு பெயரளவில் கிரையப்பத்திரம் ஏழுதி கொடுத்ததாக கூறுவதும், மேற்படி பெயரளவில் ஏற்படுத்தப்பட்ட கிரையப்பத்திரம் செல்லத்தக்க ஆவணமல்ல என்பதும், மேற்படி 1–ம் எதிர்மனுதாரரின் செயலானது

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:28:07 +0530

மனுதாரர்களை ஏமாற்றும் நோக்கில் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதும் முற்றிலும் தவறான சங்கதிகள் ஆகும். மேலும் உத்தேச தரப்பினர் சொத்தை வாங்கும்போது சொத்திற்குரிய அனைத்து நகல்களையும் பெற்றும், அதற்குண்டான சட்டப்பூர்வமான கருத்தைப் பெற்றும், மேற்படி சொத்துக்கான வில்லங்க சான்றிதழை சரிபார்த்தும், அனைத்து வருவாய் ஆவணங்களும் 1–ம் எதிர்மனுதாரர் பெயரிலேயே உள்ளது என்பதையும் கவனத்தில் கொண்டும், மேற்படி சொத்து 1–ம் எதிர்மனுதாரருக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்பதையும் கண்டறிந்த பின்னரே மேற்படி சொத்தானது 1–ம் எதிர்மனுதாரரால் உத்தேச தரப்பினருக்கு கிரையம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. மேலும் பினாமி பரிவர்த்தனைகள் (தடை) சட்டம் 1988 அமலுக்கு வந்தபிறகு 1–ம் மனுதாரரின் வாதத்தின் மூலமாகவோ, எழுத்துமூலமான அறிக்கை மூலமாகவோ, சட்டமன்றங்களால் இயற்றப்பட்ட சட்டத்தின் முன்மொழிவுக்கு ஒப்புதல் அளிப்பதன் மூலமாகவோ யாரும் பினாமி பரிவர்த்தனைக்கான வாதத்தை எழுப்ப முடியாது. ஆனால் தவறான, ஏற்றுக்கொள்ள முடியாத வாதங்களை முன்வைத்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே 20.04.2021 தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் கீழ் உள்ள சொத்தை 1–ம் எதிர்மனுதாரர் மற்றும் 1–ம் மனுதாரரின் நலனுக்காக அவர்களது பாட்டனார் முத்துகவுண்டர் வாங்கியதாக கருத முடியாது. உண்மையில் அந்த சொத்தை 1–ம் எதிர்மனுதாரர் சுயமாக சம்பாதித்த சொத்து என்பதால் அதன்மீது யாரும் உரிமை கோர இயலாது. குறிப்பாக அவர் சுயமாக சம்பாதித்த நிதியிலிருந்து வாங்கிய சொத்து என்பதால் அவர் எவர் ஒருவருக்கும் விற்பனை செய்ய உரிமை உள்ளது. அந்த வகையில் இந்த உத்தேச தரப்பினருக்கு சொத்தை கிரையம் செய்துள்ளார். எனவே எதிர்மனுதாரர்/4–

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:28:18 +0530

வது உத்தேச தரப்பினரை அசல் வழக்கில் 4–ம் பிரதிவாதியாக சேர்க்க வேண்டும் என்று மனுதாரர்களால் கோரப்படும் இம்மனுவானது நிலைக்கத்தக்கதல்ல. மனு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

5. இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியம் அளிக்கவில்லை மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. <u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில்:–</u>

7. இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

8. தீர்வு:–

மனுதாரர்கள்/ வாதிகள் 4–ம் எதிர்மனுதாரர் /உத்தேச தரப்பினரை அசல் வழக்கில் 4–ம் பிரதிவாதியாக சேர்த்து உத்தரவிடக் கோரி உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151–இன் கீழ் மனு தாக்கல் செய்துள்ளார்கள்.

9. மேற்படி அசல் வழக்கில் குறிப்பிடப்பட்டிருந்த வழக்கு சொத்துக்களின் ஒரு பகுதியானது 4–ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினரால் கடந்த 20.04.2021 அன்று கிரையம் பெறப்பட்டுள்ளது என்றும், எனவே, அவரை இவ்வழக்கில் 4–ம் பிரதிவாதியாக சேர்த்து கொள்ள உத்தரவு பிறப்பிக்க வேண்டும் என்றும் பரிகாரம் கோரப்பட்டுள்ளது. மேற்படி மனுவில் ஆஜரான 4–ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினரான ராமசாமி தரப்பில் எதிருரை தாக்கல் செய்து மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று தெரிவித்துள்ளார். மேலும் இந்த மனுதாரர்களை ஏமாற்ற வேண்டி 4–ம் எதிர்மனுதாரர் எந்தவொரு கிரைய ஆவணத்தையும் பெயரளவிற்கு ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்றும் அது

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:28:25 +0530

செல்லக்கூடிய கிரையம் என்றும், அந்த சொத்தில் மனுதாரர்களுக்கு உரிமையில்லை என்றும் தெரிவித்துள்ளார். மேற்படி 4–ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையை பார்க்கும்போது அவர் 1–ம் எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதி தெரிவிக்க வேண்டிய சங்கதிகளை அனைத்தையும் மேற்படி 1–ம் பிரதிவாதியாகவே தன்னை பாவித்துக்கொண்டு தெரிவித்துள்ளார் என்பது தெரிய வருகின்றது. மேற்படி 1–ம் எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதி தனது எதிருரையில் பினாமி பரிவர்த்தனைகள் (தடை) சட்டம் 1988 பிரிவு 4(1)–ன்படிக்கு இவ்வழக்கு நிலைக்கக்கூடியதல்ல என்று மட்டும் தெரிவித்திருந்த போதிலும் அந்த சங்கதிகளுக்கு இணைந்த வகையில் பல்வேறு சங்கதிகளை 4–ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர் தெரிவித்துள்ளார். இருப்பினும் இவ்வழக்கு சொத்துக்களின் ஒரு பகுதி தன்னால் கிரையம் பெறப்படவில்லை என்று குறிப்பான வகையில் மறுத்து யாதொரு சங்கதிகளையும் தெரிவிக்கவில்லை. மேற்படி 4–ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினர் கிரையம் பெற்றுள்ள சொத்தில் அவருக்கு முழு பாத்தியம் உள்ளதா? அல்லது மனுதாரர்கள்/வாதிகள் தெரிவிப்பது போன்று குறிப்பிட்ட அளவிற்கு மட்டுமே உரிமை உள்ளதா? என்பதையும் அல்லது மேற்படி 4–ம் எதிர்மனுதாரர் /உத்தேச தரப்பினர் பெற்றுள்ள கிரையம் செல்லக்கூடியதா? அல்லது இல்லையா? என்பதைப் பொறுத்தும் தனியாக வேறு வழக்கு தாக்கல் செய்து முடிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை. மேற்படி 4–ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினரை இவ்வழக்கிலேயே 4–ம் பிரதிவாதியாக சேர்த்துக்கொண்டு வழக்கை மேல்நடத்தும் பட்சத்தில் அது இருதரப்பினருக்குமிடையே உள்ள பிரச்சனைகளை ஒரே நடவடிக்கையான இவ்வழக்கில் முடிவு செய்வதற்கு ஏதுவாக அமையும். எனவே மேற்படி அசல் வழக்கில் 4–ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினரை 4–ம் பிரதிவாதியாக

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:28:32 +0530

சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று இந்த மனுதாரர்கள்/வாதிகளால் கோரப்படும் பரிகாரமானது ஏற்புடையதாக உள்ளது. இந்த சூழ்நிலையில் மேற்படி 1–ம் எதிர்மனுதாரரும், 4–ம் எதிர்மனுதாரரும் தாக்கல் செய்துள்ள எதிருரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் எதுவும் மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுக்களை தற்போதைய சூழ்நிலையில் நிராகரிப்பதற்கு போதுமானதல்ல. எனவே மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவினை அனுமதித்து 4–ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினரை 4–ம் பிரதிவாதியாக வழக்கில் சேர்த்துக்கொள்ள உத்தரவிடுவதே நீதிக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

முடிவில், மனுதாரர்கள்/வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு அனுமதிக்கப்பட்டு, 4–ம் எதிர்மனுதாரர்/உத்தேச தரப்பினரை அசல் வழக்கில் 4–ம் பிரதிவாதியாக சேர்த்து உத்தரவிடப்படுகிறது. தரப்பினர்களின் உறவுமுறையை கருத்திற்கொண்டு செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் விரிவாக்கம் செய்து, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் சரி பார்க்கப்பட்டு, 2025 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 04 ம் நாளான இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

R.Velaras Digitally signed by R.Velaras Date: 2025.12.04 18:28:39 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,

சேலம்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :– இல்லை
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்: – இல்லை

R.Velaras Digitally signed by

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
சேலம்.